நாள்- 28.07.2023

Case No.OS.229/2016 (PW1 Cross )

PW.1- பார்த்தசாரதி – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் தரப்பில் வா.சா.ஆ.7 அசல் வழக்கு எண்.14/2016 ஆற்காடு முன்சிப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த வழக்கை பிரதிவாதிகள்தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.14/2016 ல் என்ற வழக்கில் வழக்கு சொத்தின் ஆவணங்கள் தவறான முறையில் பெறப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. அசல் வழக்கு எண்.14/2016 வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களை பற்றி நான் மறுப்பு தெரிவித்து அந்த சங்கதிகளை என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் நான் ஆற்காடு முன்சிப் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 18/2016 ல் வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்தும், பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கின் சொத்து இரண்டும் ஒன்று என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 14/2016 மற்றும் 18/2016 வழக்கு சொத்துக்களின் ஆவணங்கள் ஒன்று என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 25 நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 14/2016 மற்றும் 18/2016 ஆகியவை வழக்கு சொத்தின் முந்தைய கிரைய ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண். 14/2016 மற்றும் 18/2016 வழக்கு சொத்தை நான் 2010 ல் கிரையம் செய்தேன் என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு நான் சொத்தை சுவாதீனம் எடுத்து மற்றும் அனுபவித்து வந்தேன் என்றால் சரியல்ல 2010 லிருந்து அனுபவித்து வருகிறேன். நான் கிரையம் பெற்ற சொத்தின் ஆவணங்கள் தவறான ஆவணங்கள் என்பதால்தான் பிரதிவாதி என்மீது அசல் வழக்கு எண். 14/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு தொடுத்தபிறகுதான் நான் அசல் வழக்கு எண். 18/2016 என்ற வழக்கை தொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ல் பிரதிவாதி தரப்பில் கொடுத்த பொதுஅறிவிப்பில் அசல் வழக்கு எண்.14/2016 ல் கண்டுள்ள சொத்து விவரப்பட்டியலில் போலியான ஆவணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்தான் நாளிதழில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)